## November 7, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பிலிப்பின்ஸை மிகக் கடுமையாகத் தாக்கிய கால்மேகி புயலால் மத்திய மாகாணங்களில் 114 பேர் உயிரிழந்துள்ள நிலையில், நாடு முழுவதும் அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.
2. பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான எல்லையில் அமைதியை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன், இரு நாட்டு பிரதிநிதிகளும் அடுத்தகட்ட பேச்சுவார்த்தையை துருக்கியில் தொடங்கினர்.
3. சவூதி அரேபியாவில் நடைபெறவுள்ள ஆசிய கோப்பை வில்வித்தை 3-ஆம் நிலை போட்டிக்கு, இந்திய பாரா வீராங்கனை ஷீத்தல் தேவி தகுதி பெற்றார். பாரா அல்லாத வழக்கமான போட்டியில் பங்கேற்கும் முதல் இந்திய மாற்றுத்திறனாளி வீராங்கனையாக அவர் சாதனை படைத்திருக்கிறார்.
4. தமிழகத்துக்கும், உத்தர பிரதேசத்தின் புகழ்பெற்ற ஆன்மிகநகரமான காசிக்கும் (வாரணாசி) இடையேயான தொன்மை வாய்ந்த நாகரிக மற்றும் கலாசாரத் தொடர்பைப் போற்றும் 'காசி தமிழ் சங்கமத்தின்' 4-ஆம் ஆண்டு நிகழ்வு (4.0), டிசம்பர் 2-ஆம் தேதி முதல் தொடங்குகிறது.
5. மியான்மரில் செயல்பட்டு வந்த இணைய மோசடி மையத்தில் சிக்கிய 270 இந்தியர்களை இந்தியா மீட்டது. அவர்கள் இரு ராணுவ விமானங்கள் மூலம் தாயகம் திரும்புகின்றனர்.
    i. மியான்மரின் மியாவாடி நகரில் உள்ள கே.கே.பூங்காவில் செயல்பட்டு வந்த இணைய மோசடி மையத்தில் கடந்த மாதம் நடைபெற்ற சோதனையில் 500 இந்தியர்கள் உள்பட 28 நாடுகளைச் சேர்ந்த 1,500 பேர் தப்பினர். அவர்கள் மியான்மர் எல்லை கடந்து தாய்லாந்தில் உள்ள மே சோட் என்ற நகரத்துக்குச் சென்றனர். அங்கிருந்து முதல்கட்டமாக 26 பெண்கள் உள்பட 270 இந்தியர்களை விமானப் படையின் இரு சிறப்பு ராணுவ விமானங்கள் மூலம் இந்தியா மீட்டதாக பாங்காக்கில் உள்ள இந்திய தூதரகம் சமூக வலைதளத்தில் பதிவிட்டது.
6. இந்தியா-நியூஸிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் தீவிரமடைந்துள்ளதாகவும், இந்த ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யப்படும் என்றும் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்தார்.
7. தேசிய பாடலான 'வந்தே மாதரம்' பாடல் இயற்றப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில், ரோட்டோருவா நகரில் (நியூ ஸிலண்ட்) இந்திய சமூகத்தினருடன் இணைந்து அமைச்சர் பியூஷ் கோயல் அந்தப் பாடலைப் பாடினார்.
    i. வங்க மொழிக் கவிஞர் பங்கிம் சந்திர சாட்டர்ஜியால் 1875-ஆம் ஆண்டு எழுதப்பட்ட இந்தப் பாடலின் முதல் பிரசித்தி பெற்ற பொது அரங்கேற்றம் 1896-ஆம் ஆண்டு கொல்கத்தாவில் ரவீந்திரநாத் தாகூரால் செய்யப்பட்டது.
8. உச்சநீதிமன்ற உத்தரவுப்படி தமிழகத்துக்கு கர்நாடகம் நவம்பரில் 13.78 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்து விட வேண்டும் என தில்லியில் நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் தமிழகம் வலியுறுத்தியுள்ளது.
    i. தமிழகம், கர்நாடகம் இடையேயான காவிரி நதிநீர் பங்கீட்டு பிரச்னைவழக்கில் உச்சநீதிமன்றம் 2018-ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது. கர்நாடகம் எந்தெந்த மாதங்களில் எவ்வளவு நீர் தமிழகத்துக்கு திறக்க வேண்டும் என்பதை அந்தத் தீர்ப்பின் மூலம் உச்சநீதிமன்றம் நிர்ணயம் செய்தது.
    ii. அந்தத் தீர்ப்பை அமல்படுத்தவும், நீர்ப் பங்கீட்டை கண்காணிக்கவும் காவிரி நீர்

மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய இரு அமைப்புகளையும் உச்சநீதிமன்றம் அமைத்தது. அதன்படி, இந்த இரு அமைப்புகளும் அவ்வப்போது கூடி காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாக உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி உத்தரவுகளைப் பிறப்பித்து வருகின்றன.

9. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொன் விழா, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் விரைவில் நடத்தப்படும் என மன்ற உறுப்பினர் செயலர் விஜயா தாயன்பன் தெரிவித்தார். சென்னை அரசு இசைக்கல்லூரியில் 2025-2026-ஆம் ஆண்டுக்கான இருநாள் தமிழிசை விழா தொடங்கியது. தமிழ்நாடு இயல் இசை நாடகமன்ற உறுப்பினர் - செயலர் விஜயா தாயன்பன் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்துப் பேசியதாவது:
   i. இசை மேதை பி.சாம்பமூர்த்தி உதவியால் தொடங்கப்பட்ட சென்னை இசைக் கல்லூரி, கடந்த 1949 -ஆம் ஆண்டு மத்திய கர்நாடக சங்கீத கல்லூரியாக செயல்பட்டது. 1974-ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் கருணாநிதி தலைமையில் இந்த கல்லூரியின் வெள்ளி விழா நடைபெற்றது. அப்போதுதான் இந்தக் கல்லூரி அடையாறு 'பிரிட்ஜ் ஹவுஸ்' கட்டடத்துக்கு மாற்றி 'தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆங்கிலேயர்களின் இந்த ‘பிரிட்ஜ்ஹவுஸ்' தற்போது' தென்றல்' என பெயர் மாற்றத்துடன் செயல்படுகிறது.
   ii. இதேபோல, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்று இருந்த அமைப்பு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என முன்னாள் முதல்வர் கருணாநிதியால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்த மன்றத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் விரைவில் 'பொன்விழா' நடத்தப்படும் என்றார்.

10. சட்டவிரோத பந்தய செயலி வழக்கு தொடர்பாக இந்திய கிரிக்கெட் அணி முன்னாள் வீரர்கள் சுரேஷ் ரெய்னா, ஷிகர் தவன் ஆகியோருக்குச் சொந்தமான ரூ.11.14 கோடி சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியது.
   i. பணம் '1எக்ஸ் பெட்' என்ற செயலி உள்பட பல்வேறு இணையவழி சூதாட்ட செயலிகள் முதலீடு, வாடிக்கையாளர்களிடம் வசூலித்தது என கோடிக்கணக்கில் பணத்தை சட்டவிரோதமாக கையாண்டுள்ளன. விளையாட்டு, பந்தயம் என்ற பெயரில் மக்களிடம் இருந்து முறைகேடாக கோடிக்கணக்கில் பணத்தைச் சம்பாதித்துள்ளன. இது தொடர்பான பண முறை கேடு வழக்கு குறித்து அமலாக்கத் துறை விசாரணை நடத்தி வருகிறது.
   ii. இணையவழி பந்தய செயலி களை இந்தியாவில் 22 கோடி பேர் பயன்படுத்தி வந்துள்ள னர். இதில் 11 கோடி பேர் நாள் தோறும் இந்தச் செயலிகளில் பந்தயம் கட்டி பணத்தை இழந் துள்ளனர். இதனால் பலர் தற் கொலை செய்து கொண்டனர்.
   iii. நிதி மோசடி, பணப் பரிவர்த் தனை குற்றங்கள் மற்றும் மக்க ளின் நிதி இழப்பைத் தடுக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட 'இணையவழி விளையாட்டு மேம்பாட்டு மற்றும் ஒழுங்காற்று மசோதா-2025' கடந்த செப்டம் பர் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.